இணைப்பு

[119..ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண் 192-க்கான விடையைக் காண்க].

தஞ்சை மாவட்டத்தில் உள்ள பாபநாசம் மீனவர் கூட்டுறவு சங்க நிர்வாகக் குழு கீழ்க்கண்ட காரணங்களுக்காக மீன்துறை இயக்குநரால் கலைக்கப்பட்டது:—

1அ. நிர்வாக அதிகாரிகளால் சட்டத்திற்குள்ளாக பிறப்பிக்கப்பட்ட ஆணைகளை சங்கத் தலைவர் வேண்டுமென்றே நிறைவேற்ற மறுத்தது.

தஞ்சையில் உள்ள மீன்துறை உதவி இயக்குநர் (மண்டலம்) அவர்கள் 1976 ஆம் ஆண்டு ஜூலை 9 ஆம் நாளிட்ட சுற்றறிக்கையிலும் (7454/76). 1976 ஆம் ஆண்டு ஜூலை 22 ஆம் நாளிட்ட சுற்றறிக்கையிலும் சங்கத்திற்கு தவணை செலுத்துவதில் நிலுவையில் உள்ள சங்க அங்கத்தினர்களுக்கு மீன்பிடி உரிமம் வழங்கவேண்டாம் என்று அறிவுரை வழங்கியுள்ளார். மேற்படி அறிவுரையினை சங்க நிர்வாகிகள் வேண்டுமென்றே நிராகரித்து விட்டனர். அத்துடன் நிலுவையில் உள்ள 5 பஞ்சாயத்தார் உள்பட 22 உறுப்பினர்களுக்கு, பசலி 1387 ஆம் ஆண்டு மீன்பிடி உரிமம் வழங்கியுள்ளனர். இதனால், காலம் தவறாமல் பணம் செலுத்தியுள்ள அங்கத்தினர்களுக்கு மீன்பிடி உரிமை கிடைக்கவில்லை.

1ஆ. 1978 ஆம் ஆண்டு ஜூலை 29 ஆம் நாளிட்ட சுற்றறிக்கையில், மீன்துறை உதவி இயக்குநர் தஞ்சை மறுகுத்தகை எடுக்கும் எல்லா அங்கத்தினர்களிடத்திலும் கையொப்பம் வாங்கி, வேண்டிய ஒப்பந்தங்கள் நிறைவேற்றப்படவேண்டும் என்று அறிவுறுத்தியுள்ளார். அவ்வாறு அங்கத்தினர்களின் ஒப்பம் பெற்றால், சங்கத்திற்கு ஏதேனும் நஷ்டம் ஏற்படும் என்றால், அதில் அவர்களுக்கும் பங்கு உண்டு என்ற நிலை ஏற்படும். ஆனால், சங்க நிர்வாகம் மேற்கண்ட சுற்றறிக்கைக்கு சிறிதளவு கூட மதிப்பு தராமல், வேண்டிய ஒப்பந்தங்களை அங்கத்தினர்களின் கையொப்பத்தோடு நிறைவேற்றவில்லை.

1இ. கூட்டுறவுத் துறையில் பயிற்சி பெற்ற நபர்களே, கூட்டுறவு சங்கங்களில் எழுத்தாளர்களாக நியமிக்க வேண்டும் என்று நிலையான அறிவுரை உள்ளது. அதற்கு மாறாக முன்னாள் தலைவர், கூட்டுறவுப் பயிற்சி பெறாத திரு அயோத்தி என்பவரை சங்கத்தில் எழுத்தராக நியமித்துள்ளார்.

1ஈ. முன்னாள் தலைவரின் கருத்துக்கு மறுப்பு தெரிவிக்கும் நிர்வாகக் குழு உறுப்பினர்களுக்கு சங்க கூட்டத்தைப் பற்றி அறிவிப்பதில்லை. அதற்கு வேண்டிய நிகழ்ச்சி நிரல்களும் அனுப்புவதில்லை. தலைவரின் ஆதரவாளர்களுக்கு மட்டும் சங்கக் கூட்டத்தை அறிவித்து வேண்டிய கூட்டங்களை தலைவர் நடத்தியுள்ளார். இக்குறையை மீன்துறை உதவி

1983 பிப்ரவரி 9]

இயக்குநரிடம் அதிருப்தியாளர்கள் அறிவித்தனர், அதன்படி மீன்துறை உதவி இயக்குநர் 1976 ஆம் ஆண்டு ஆக்ஸ்ட் 22 ஆம் நாளிட்ட தனது சுற்றறிக்கையில் சங்கத் தலைவருக்கு சங்கக் கூட்டத்தைப்பற்றிய அறிவிப்பும், நிகழ்ச்சி நிரலும், சான்றிதழ் பெற்ற அஞ்சல் மூலம் எல்லா அங்கத்தினர்களுக்கும் அனுப்பப் படவேண்டும் என்று அறிவுறுத்தியுள்ளார். சங்கத் தலைவரும் மேற்படி அறிவுரையை பின்பற்றுவதாக உறுதியளித்துள்ளார். நடைமுறையில் உறுதி மொழிக்கு மாறாக சில நிர்வாகக் குழு அங்கத்தினர்களுக்கு தகவல்கள் அனுப்பாமல் குழுவைக் கூட்டியுள்ளார், மேற்கண்ட குறை ஆய்வு அறிக்கையிலும் குறிப்பிடப் பட்டுள்ளது.

1உ. கும்பகோணத்தில் உள்ள வலங்கைமான் முன்சீப் நீதி மன்றத்தில், இச்சங்கத்தின் மீது தொடரப்பட்ட வழக்கில், சங்க நலனைக் காக்க, சங்கம் தீவிர நடவடிக்கை எடுக்கவில்லை.

2. சங்க நிர்வாகத்தில் உட்பிரிவுகளும், உட்பூசல்களும் அதிகமாக உள்ளது. அதன் காரணமாக ஒருவரைப் பற்றி ஒருவர் நிறைய புகார் மனுக்கள் மீன்துறை உதவி இயக்குநரிடம் கொடுத்துள்ளனர். இவ்வாறு நிர்வாகக்குழு உறுப்பினர் களிடையே நிறைய பூசல்கள் உள்ளதால், சங்க நிர்வாகம் சீர் குலைந்து விட்டது.

3அ. சங்க துணை விதி 48-ல் குறிப்பிட்டுள்ளப்படி, தணிக்கை அறிக்கையும், ஆய்வு அறிக்கையும் சங்கப் பொதுக் குழுவில், நிர்வாகக்குழு வைக்கவில்லை. தணிக்கை அறிக்கை யிலும், ஆய்வுக் குழு அறிக்கையிலும் உள்ள குறைகளை நீக்குவதற்கு சங்க நிர்வாகக் குழு எந்த முயற்சியும் எடுத்துக் கொள்ளவில்லை.

3ஆ. முன் தணிக்கை அறிக்கையில் குறிப்பிடப்பட்ட குறை பாடுகளை நிவர்த்தி செய்யவில்லை என்று 1977–78 ஆம் ஆண்டு இறுதி தணிக்கை அறிக்கையில் சுட்டிக் காட்டப் பட்டுள்ளது.

3இ. சங்கத் துணை விதி 42 (B)–யில் மீன்பிடி உரிமம் எல்லா சங்க அங்கத்தினர்களுக்கும் சரிசமமாக கொடுக்க வேண்டும் என்று உள்ளது. ஆனால் விதிக்கு மாறாக சங்க நிர்வாகக் குழு, அவர்கள் விருப்பத்திற்கேற்ப. அவர்களுக்கு வேண்டிய அங்கத்தினர்களுக்கு மட்டும்தான் மீன்பிடி உரிமம் கொடுத்துள்ளது. அவ்வாறு மீன்பிடி உரிமம் கொடுத்ததினால், சங்கத்தில் உள்ள அதிகமான உண்மை உறுப்பினர்களின் நலன் பாதிக்கப்பட்டுள்ளது.

3ஈ. சங்கத் துணை விதி 25-ன் படி சங்கத்தின் வருடாந்திர கணக்கு அறிக்கையை சங்க நிர்வாகம் மீன்துறை இயக்குநருக்கு அனுப்பத் தவறியது.

[1983 பிப்ரவரி 9

3உ. 1977–78 ஆம் ஆண்டு முடிய சங்கத்திற்கு கிடைத்த நிகர லாபத்தை தணிக்கை அறிக்கையில் குறிப்பிடப் பட்டுள்ளது; அவைகள் துணை விதி 43–ல் குறிப்பிட்டுள்ளபடி அங்கத்தினர்களுக்கு பகிர்ந்தளிக்கப்படவில்லை.

3ஊ. சங்கத்தின் ஒதுக்க நிதியை சங்கத்தின் வியாபாரத்தை அபிவிருத்தி செய்ய சங்க நிர்வாகம் உபயோகித்துள்ளது. இதற்கு துணைவிதிகள் 44 (2) மற்றும் 48-ல் விதித்துள்ளபடி மீன்துறை இயக்குநர் மற்றும் கூட்டுறவுத்துறை பதிவாளர் அவர்களின் அனுமதி பெறவில்லை.

3எ. சங்கத்தின் துணை விதி 42 (பி) 2–ன் படி மீன்பிடிக்கும் உரிமை எல்லா அங்கத்தினர்களுக்கும் சமமாக பகிர்ந்தளிக்கப் படவேண்டும். ஆனால், துணை விதிக்கு புறம்பாக சங்க நிர்வாகிகள் தங்களுக்கு வேண்டியவர்களுக்கு மீன்பிடிக்கும் உரிமை, கொடுத்திருக்கிறார்கள். அதனால் ஒரு பெருவாரியான அங்கத்தினர்கள் நலன் பாதிக்கப்பட்டிருக்கிறது.

முன்னாள் தலைவர் சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கு (Writ Petition) தொடர்ந்தார். அந்த வழக்கு உயர்நீதி மன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டது. உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பை எதிர்த்து அவர் டில்லியில் உள்ள உச்ச நீதிமன்றத்தில் (Supreme Court) வழக்கு தொடர்ந்து பின்னால் அதை திருப்பிப் பெற்றுக் கொண்டார். திருப்பிப் பெற அனுமதி வழங்கும் பொழுது 1980 ஆம் ஆண்டு டிசம்பர் 1 முதல் 15 தினங் களுக்குள், உரிய முறையீட்டு அதிகாரியிடம் இது குறித்து முறையீடு செய்யும்படி முன்னாள் தலைவருக்கு இந்திய உச்ச நீதிமன்றம் அறிவுறுத்தியது.

நீதிமன்றத்தின் அறிவுரையின்படி அவர் 1980ஆம் ஆண்டு டிசம்பர் 13 அன்று அரசுக்கு மேல் முறையீடு செய்தார். அரசு ஆழ்ந்த பரிசீலனைக்குப் பிறகு, கொடுக்கப்பட்ட மேல் முறையீட்டை நிராகரித்து, 1980ஆம் ஆண்டு மார்ச் 19 அன்று ஆணை வழங்கியுள்ளது.

TAMIL NADU LEGISLATURE LIBRARY
4-OCT 1983
MADRAS-600 009